# போர்வாள்


ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார் | தனி இதழ் அணா 1½
இரா. இளஞ்செழியன், B. A. (Hons.) | வெளிநாடு அணா 2.

சென்னை 15—11—47 சனிக்கிழமை | வீச்சு 14





தமிழ்நாட்டுக் காங்கிரஸ் வேண்டாம் என்று வெறுத்து, ஒதுக்கி வடநாட்டுக் காங்கிரஸ் மிக உயர்ந்த நிலையில் நிறுத்தி, கவர்னர்களாக முடி சூட்டுகிறது. தென்னாட்டுக் காங்கிரசே! என்ன செய்யப்போகிறாய்?

## காந்தீயமும் வ. உ. சி. யும்

நாங்களெல்லோரும் கதர் அணிந்துகொண்டோம். ஆனால் வ. உ. சி. கதர் அணிய மறுத்துவிட்டார். நீங்கள் ஏன் கதர் அணிவதில்லை என்று ஒரு முறை காந்தியடிகள் சிதம்பரனாரைக் கேட்டார். எனக்குக் கதரில் நம்பிக்கையில்லை என்று அஞ்சாது கூறினார் சிதம்பரனார்.

—திரு. வி. க.

★

காந்தீயத்தால் இந்த நாட்டிற்கு மிகவும் தீமை விளையும் என்பதை விடாப் பிடியாகப் பேசி ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் பிரசாரம் செய்து வந்தார் சிதம்பரம் பிள்ளை.

—நாமக்கல் கவிஞர்.

★

காந்தியடிகளின் ஒத்துழையாமைக் கொள்கை சிதம்பரனாருக்குப் பிடிக்கவில்லை. அதன் சகல அம்சங்களையும் எதிர்த்தார் சுருங்கக் கூறின் காந்தியடிகளின் தலைமையிலேயே சிதம்பரனார்க்கு நம்பிக்கை இல்லை.

—ம. பொ. சிவஞானம்.

★

# விடை ஒலி இல்லை!

[ஏர்]

## 1

சன்னல் மூலம் பரந்த வானைப் பார்த்துப் பார்த்துப பெருமூச்சு விட்டாள் பங்கஜம். சில்லென்று வீசிய காற்று அவளுடைய சுருண்ட மயிரை நெற்றியில் தவழும்படிச் செய்தது. கையை ஊன்றியபடி தெருவில் செல்வோரைப் பார்த்திருந்த அவள் கண்கள் திடீரென்று எதையோ ஆவல்தோன்ற உற்று நோக்கின. பயங்கரமாக 'ஹாரன்' அலற அவ்வழியே வந்த 'ஆட்சன்' காரில் இருந்த இரு இளங் காதலரின் உருவம் அவள் கவனத்தை இழுத்தது. அவ்வுருவங்களைக் கண்ட மாத்திரத்தில் அவள் கண்கள் விரிந்தன. அச்சம், சோகம், பொறாமை, பழிக்குப்பழி ஆகிய அலைகள் வீறிட்டெழுந்து அவள் உள்ளத்திலே பயங்கர கர்ஜனை புரிந்தன. மோட்டாரும் மறைந்தது. அவள் கண்கள் 'பொல, பொல' வென நீரை உகுத்தன. அவள் உடனே அவ்விடத்தை விட்டு ஓடி தன் கட்டிலின்மேல் குப்புறப் படுத்துக் கொண்டு முகத்தைத் தலையணையில் புதைத்துக் கொண்டு 'விம்மி, விம்மி' அழுதாள். அவள் அழுகைக்குப் பரிதாபப் படுவது போன்று அவ்வறையிலிருந்து எதிரொலியும் எழுந்தது. எத்தனை நேரம் இம்மாதிரி அழுதாளோ அது அவளுக்கே தெரியாது. அறையில் இருளும் சூழ்ந்துகொண்டது. திடீரென பங்கஜம் எழுந்து விளக்கையும் ஏற்றினாள், அவள் கண்கள் இரத்தம்போன்று சிவந்திருந்தன. தலைமயிர் அலங்கோலமாகக் கிடந்தது. நெற்றியிலுள்ள குங்குமப் பொட்டு அழிந்திருந்தது.

சற்றுநேரம அறையில் அமைதி. பின்பு அவள் ஒரு பெருமூச்சுவிட்டாள் "எனக்கு இதுதானு முடிவு?" — அவள் கேட்டாள். "உனக்கு இதுதானு முடிவு?"—என்று பரிகசிப்பதுபோன்று அறையும் எதிரொலித்தது. எனவே அவள் வேதனையும் பன்மடங்கானது.

"அன்பரே, அன்று நீர் சொன்ன மொழிகளெல்லாம் வெறும் கற்பனையா? என்னை நீர் இப்படி மோசம் செய்வீர் என்று நான் கனவிலும் கருதவில்லையே!....அன்று நீர் கூறிய கொஞ்சல் மொழிகள், இன்றல்லவா வஞ்சக மொழிகளாகக் காட்சி அளிக்கின்றன! என்னைக் கைவிட்டு விட்டீரே!......ஏன்? நான் ஏழை என்பதுதானே காரணம். என்னை மணந்தால் உம் குடும்ப மதிப்பு மங்கும் என்பது தானே உமது பயம். ஆம் நான் ஏழைதான். ஆயினும் என்ன? நான் அழகாக இல்லையா இயற்கையாகவே?....அழகு — அழகு ...ஆம், ஏழைக்கு அழகு தகாது ....உண்மை! அழகு ஏழையின் வாழ்வைப் பாழாக்கும் இடி; அழகு ஏழையின் வாழ்வைச் சிதைக்கும் புல்லுருவி; அழகு ஏழைக்கு விஷம்; ஏன்?—அழகு ஏழைக்குத் தூக்குமரம்"— அவள் சித்தம் சிதறி பித்தம் பிடித்தவள்போல் பேசினாள்.

அறையும் "தூக்குமரம், தூக்குமரம்" என்று எதிரொலி எழுப்பியது.

அவள் கடகட வென்று சிரித்தாள்.

"ஆம் — அதுதான் சரியான முடிவு—**தூக்குமரம்** — எனக்கு அங்குதான் '**விமோசனம்!**'

என் காதல் சிதைந்தது.
அழிந்தது. பின்பு எனக்
வாழ்வு? 'அவர்!' இனி
'அவரை' நினைக்கவும் கூட
ஆம், 'அவர்' வேறு ஒருத்தி
அன்பிலே ஈடுபட்டுவிட்
அப்படி இருக்க இனி என
வாழ்வு ஏது? அங்கு வாழ்
ஆனால் இங்கு வேதனை. இ
சாவு—ஆனால் அங்கு அமை
சூறுவளியிலே சிக்கி, வே
யில் வேகும் எனக்கு அ
வேண்டும். கட்டாயம் அ
வேண்டும். அமைதி—அது
கிருந்தால் என்ன? என் வே
தீரவேண்டும். அவ்வ
தானே"—என்றாள்.

பின்பு சிந்தனையில் ஆழ்ந்த
சற்றுநேரம் பொறுத்து ஏ
முடிவிற்கு வந்தவள்போல
காணப்பட்டாள். பின்பு
எடுத்து ஏதோ தீட்டி

## 2

பங்கஜம் அழகி. முனிரத்
முதலியார் வீட்டுக் கணக்
பிள்ளை குப்புசுவாமியின் ம
அவள். ஏழ்மையிலே பி
வள். வறுமையிலே வாடிய
அதிலும் தாயை இழந்த
அவள் குப்புசுவாமியின்
மகள். எனவே அவன்
பைக் கேட்கவும் வேண்டு
தாயற்ற அப்பெண்ணை அ
தன் கண்ணெனப் பார்த்
தான். அவன் அணிந்
ததோ கிழிந்த ஓட்டு வே
பாடமைந்த கோட்டு. ஆ
மகளுக்கு வாங்கித் தந்தது
மேலாடை.

முனிரத்தின முதலி
பெரிய பணக்காரர். கோ
குளத்திற்குத் தானம், த
செய்ய அவர் தயங்கவே ம
டார். ஊருக்குப் 'பெரிய ம
ஷனு'ம் அவர்தான். கு
சாமிக்கு அவரிடம் 40 வ

(11-ம் பக்கம் பார்க்க)

# ழமைத் தேவதை சிரிக்கிறது!

(“ சாக்ரடீஸ் ”)

1

ட்டப் பகலில், நூற்றுக்கான ஆண்களும் பெண்ம் திரண்டு குழுமி தன் வடிக்கைகளைக் கவனித்துக் ண்டிருக்கையில், ஒரு முஸ் பக்கிரி, பிரம்மபுத்திரா யைக் கிழித்துக்கொண்டு, சாதாரணமாக நடந்து ர். அவர் நடக்கத் டங்கியதும், ஓடுகின்ற ஆறு ண்டாக விலகி அவர் போக விட்டது. பக்கிரி நடந்து ன்று, தன்னை இ வசமாக றிச் செல்ல மறுத்துவிட்ட கோட்டியின் படகைக் த்து விட்டு, அவனையும் ருக அடித்தார். பக்கிரி பதற்கு ஆற்று வெள்ளம் விட்ட இந்த அதிசய நிகழ்ச் ப் பலர் கண்ணாரக் கண் ர்.

— “ரோஸ்னுமா-இ-கிலாபத்.”

2

லெப்பியில் உள்ள பெரிய யிலில் நாகப் பாம்பொன்று மெடுத்தாடிற்று. பிறகு கிழ மனிதர் உருவம் ற்று நடந்து செல்லத் டங்கிற்று. சற்று நேரம் றுத்து அது மீண்டும் பாம்பு வம் பெற்றது. கடைசியாக காற்றுடன் காற்றாய்க் ந்து மறைந்து போயிற்று.

— பாம்பே சமாச்சார்.

3

மலாவுக் கருகில், சாஜாலா னும் இடத்தில, இறந்த ண் ஒருத்தியின் பிணம் மயா திற்கு எடுத்துச் செல்லப் து. வழியில் பிணம் உயிர் ழெழுந்தது. எழுந்து. ஆகாயத்தில் மிக உயரச் சென்று மலைகளையும் மரங்களையும் தாண்டிக்கொண்டு, பறவை போல பறந்து சென்றது. இது இங்குள்ள எல்லாருடைய உள்ளங்களிலும் பெரிய அதிர்ச்சியை உண்டு பண்ணியிருக்கிறது.

—“ பாம்பே சமாசார் ”

4

பிலாகாட் என்னும் பகுதியில் உள்ள ஹிராலால் என்பவர், நாஸ்திகர்கள் உள்ளத்தை மாற்றி, அவர்களுடைய அவநம்பிக்கையையும் சந்தேக உணர்ச்சியையும் போக்கி, அவர்கள் அனைவரையும் சிறந்த பக்திமான்களாக மாற்றுவதற்காக, திரு விளையாடல் ஒன்று செய்து காட்டுகிறேன் என்று பல நாட்களாகவே சொல்லி வந்தார். ஒரு நாள் ஹிராலால், சில நாஸ்திகர்களை அழைத்து மந்திரத் தண்ணீர் நிறைந்த இரு டம்ளர்களை அவர்களிடம் கொடுத்து, “ நீங்கள் முதல் டம்ளரில் உள்ள தண்ணீரை என்மீது தெளித்தால், நான் உடனே முதலையாக மாறிவிடுவேன். பிறகு இரண்டாவது டம்ளரில் உள்ள தண்ணீரை என்மீது தெளித்தால் என்னுடைய முதலை உருவம் மாறி மறுபடியும் பழையபடி நான் மனிதனாய் விடுவேன் ” என்று சொன்னார். அதற்கேற்ப, அவர்கள், முதல் டம்ளரிலிருந்த தண்ணீரை அவர்மீது தெளித்ததும் அவர் உடனே ஒரு முதலையாக மாறிவிட்டார். ஆனால் முதலையின் கோர உருவமதனைக் கண்டதும் அந்த நாஸ்திகர்கள் பயந்து நடுநடுங்கி, அந்த இடத்தைவிட்டு ஓடியே போய்விட்டனர். இரண்டாவது டம்ளரிலிருந்து மந்திரத் தண்ணீரைத் தெளித்திருந்தால் முதலையாக உருமாறிய ஹிராலால் மறுபடியும் மனித உருவம் பெற்றிருப்பார். ஆனால் அந்த நாஸ்திகர்கள் ஓடிய ஓட்டத்தில் இதைச் செய்ய மறந்துபோய் விட்டனர். மந்திரத் தண்ணீரையும் கொட்டிவிட்டனர். பாவம் ஹிரால் (முதலை) பக்கத்தில் உள்ள அட்ரே நதியில் குதித்து விட்டது. இப்போது கூட, யாராவது, கரையில் இருந்து கொண்டு ஹிராலால் என்று அழைத்தால், முதலை தண்ணீர் மட்டத்தைக் காட்டிலும் நான்கு அடி உயரம் குதித்து எழுகிறதாம். கடைசியாக, ஐயோ பாவம், அந்த முதலையை எவரோ சுட்டுவிட்டனர். சுடப்பட்ட முதலையின் நீளம் சரியாக 20 அடி இருந்ததாம்.

—“ஜன்ம பூமி”

“ என்னப்பா சாக்ரடீஸ், உன்னை நாங்கள் வாய்மை தவறாதவன் என்று எண்ணி இருந்தோமே, நீ எங்கள் எண்ணத்தையெல்லாம் தவிடுபொடி ஆக்கிவிட்டு வெறும் கதையளக்கத் தொடங்கிவிட்டாயே ” என்று கேட்கத்தோன்றும் உங்களுக்கு. ஆனால் இங்கே நான் குறிப்பிட்டுள்ள நான்கு நிகழ்ச்சிகளும் வெறும் கதை அல்ல, உண்மை! ஆம், அப்படித்தான் கூறுகின்றன ரோஸ்னுமா - இ - கிலாபத், பாம்பே சமாச்சார், ஜன்மபூமி முதலிய வடநாட்டுப் பத்திரிகைகள். அந்தப் பத்திரிகைகள் கூறுவதாலேயே இந்தக் கதைகள் உண்மையாகிவிடுமா என்று நீங்கள் பகுத்தறிவு வாதம் செய்யலாம். ஆனால் பெரும்

பாலான மக்கள் - பாமரர்கள் - ஏன் என்ற கேள்வியை எழுப்பி, எதற்காக என்ற ஆராய்ச்சியை நடத்தி, எப்படி என்ற முடிவுக்கு வர முடியாதவர்கள்—இவற்றை ஐயுறுவதே பாவம், தவறு, மதத்துரோகம் என்று மனமார எண்ணுபவர்கள் - எண்ணும்படி நம்மால் பழக்கப்படுத்தப்பட்டிருப்பவர்கள் இவற்றை நம்புகின்றனர். இவை யெல்லாம் நடந்த நிகழ்ச்சிகள்-பக்திமான்களால் நடத்திக் காட்டக்கூடிய அதிசயங்கள் என்பதே அவர்கள் எண்ணம். அவர்கள் எண்ணம் கிடக்கட்டும் சாக்ரடீஸ், அது வெறும் மூட நம்பிக்கை என்று நீங்கள் சொல்வீர்கள். சொல்வீர்களே தவிர நீங்களும் அதே மூட நம்பிக்கைக்கு ஆட்பட்டு அதன் வழி செல்பவர்கள்தான். "பொய்! பொய்! நாங்களாவது இந்தக் கட்டுக் கதைகளை நம்புவதாவது! எங்களுடைய அறிவு என்ன! ஆற்றல் என்ன! பதவியும் பட்டமும் படிப்பும் கொஞ்சமா எங்களுக்கு! எவ்வளவு நெஞ்சழுத்தமப்பா உனக்கு எங்களை இவ்வளவு இறக்கிக் காட்ட" என்று நீங்கள் கொதித்தெழுந்து கோபித்து மறுப்புரை வழங்குவீர்கள் என்பது எனக்குத் தெரியும். தெரிந்து தான் சொல்கிறேன், மூட நம்பிக்கையின் செங்கோல் உங்கள் உள்ளத்தையுந்தான் ஆள்கிறது. அதன் மோகன கீதம் உங்களையுந்தான் மயக்குகிறது. அது இராகமாலிகை வாசிக்கும்போது உங்கள் உள்ளம் உங்களையும் அறியாமல் அதன் வழியேதான் போகிறது. மூட நம்பிக்கை, குறிப்பிட்டதோர் உருவத்தில் எதிர்ப்பட்டால் எதிர்க்கிறீர்கள், அதற்கு அடிமைப்பட மறுக்கிறீர்கள், அடிமைப்படுவது அவமானம் என்றுரைக்கிறீர்கள். ஆனால் அதே மூட நம்பிக்கை வேறு பல உருவங்களில் வரும்போது மதி மயங்கி அதன் பின்னே செல்லத்தான் செய்கிறீர்கள்.

வெளிப்படையாகவே கேட்கிறேன், நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள், இதோ உள்ள நிகழ்ச்சிகளை நீங்கள் உண்மை என்று தானே நம்புகிறீர்கள்?

1. பனை ஓலை-ஆற்றில் எறியப்பட்டது, ஆற்று வெள்ளத்தின் பின் செல்லாமல் எதிர் ஏறி வந்தது.

2. பக்திமான் ஒருவருடைய மந்திர சக்தியால் ஆண்பனை பெண்பனையாயிற்று.

3. அதே மந்திர சக்தியால், நெருப்புச் சுழலில் எறியப்பட்ட ஏடு எரியாமல் இருந்தது.

4. அரன் அருள் பெற்றவர் ஒருவர் நரிகளைப் பரிகளாக்கினார் பரிகளை நரிகளாக்கினார்.

5. அடியவர் நன்மையை முன்னிட்டு ஒரு சில பன்றிக் குட்டிகளைப் பாண்டிய நாடாளச் செய்தான் ஆண்டவன். அவை நாடாண்டன, முக்தியும் பெற்றன.

6. பூமியைப் பாயாகச் சுருட்டி கடலில் ஒளித்து வைத்து மக்களைத் துன்புறுத்தினான் ஓர் அசுரன்.

7. கடலிற் கிடந்த பூமியை, பன்றியொன்று வெளியேற்றிக் கொணர்ந்து, மக்கள் துயர் தீர்த்தது.

8. பன்றிக்கும் பூமிக்கும் இடையே பிறந்தது காதல். குழந்தை யொன்றைத் தந்தது.

9. பெண் ஒருத்தி பாடிக் கொண்டே சென்றாள் கோயிலுக்கு, அங்குள்ள ஆண்டவன் சிலையில் ஐக்யமாய் விட்டாள், பிறகு மங்கை காணப்படவில்லை.

10. சமய குரவர் ஒருவர் பாசுரம் பாடினார், கோயிற் கதவு தானாகவே திறந்துகொண்டது.

ஏன் ஒரு மாதிரியாக ம
கிறது உங்கள் முகம்! ந
சொல்வது கசக்கிறதா? சொ
விடுங்கள்.

மூட நம்பிக்கையை வெறு
கிறீர்கள். கட்டுக் கதைக
பொய் என்று சொல்கிறீர்க
இன்று நடந்தன என்று செ
னால்! "இல்லை இல்லை சாக்ரட
இதெல்லாம் பத்திரிகைக்கா
கட்டிவிட்ட சரடு" என்
கூசாமல் கூறுகிறீர்கள். ஆ
இந்த கதைகளை முன் ஒ
காலத்தில் நிகழ்ந்தது என்
சொன்னால் உடனே ஒப்
கொள்கிறீர்கள். ஏன் இ
வேறுபாடு?

பிரம்ம புத்திரா நதி
வெள்ளம் புரண்டு ஓடும்போ
பக்கிரி ஒருவன் மடமடவெ
நடந்துபோனான் குறுக்
விலகி வழி விட்டது நதி என்
ஒரு பத்திரிகை கூறுகிற
உடனே நீங்கள் சிரிக்கிறீர்க
பூமியைப் பாயாகச் சுருட்டின
ஒருவன் என்று புராணம் க
கிறது—பயபக்தியுடன் நம்
கிறீர்கள். நம்புவதுமட்டுமா, அ
தக் கதையின் முடிவு உங்க
தீபாவளி கொண்டாடச் செ
கிறது, நீங்களும் கொண்டா
கிறீர்கள். ஆனாலும் நீங்கள் மூ
நம்பிக்கையை வெறுப்பவர்க
என்று சொல்கிறீர்கள் நீங்க
நான் நம்பவேண்டும் அதனை!

பத்திரிகை சொல்கிறது எ
ன்றால் சிரிக்கிறீர்கள். புரா
புகல்கிறது என்றால் நம்புகி
கள். ஏன் இப்படி? புரா
ணத்தைவிட பத்திரிகை என்
நம்பிக்கைக் குறைவா
பொருளா? அல்ல என்
உங்களுக்குத் தெரியும். தெ
துந்தான் புராணத்தை நம்பு
கள், பத்திரிகைச் சேதி
பொய் என்கிறீர்கள். கார
பத்திரிகை புதுமை. புரா

மை, புதிய நிகழ்ச்சிகளோ ணங்களோ தத்துவங்களோ முறைகளோ எவையாய் ருப்பினும் அவற்றை ய்ச்சி என்னும் உரைகல்லில் ரத்துப் பார்த்துத்தான் நம்பு ர்கள்—பிறர் சொல்கிறார்கள் பதற்காக மட்டும் நம்பிவிடுவ லை. ஆனால் பழைய காலக் த்துக்ள், ... முறைகள், டங்கள், தீர்மானங்கள் என உடனே அவற்றிற்குத் தலை ங்குகிறீர்கள். பழங்கால ள் கூறுகின்றன என்றால் னே ஒப்புக்கொள்கிறீர்கள். வுக்கோ ஆராய்ச்சிக்கோ மையைப் பொறுத்தவரை ள் இடந் தருவதில்லை.

ழையகால சமயாச்சாரியர் ம் ஞானபோதகர்களும் தத் ஞானிகளும் அடியார்க்கடி களும் ஜீபர்களும் மகந்து ம் பாதிரிகளும் காஜிகளும் ய்த அதே அற்புதங்களை தக் காலத்தில் சங்கராச்சாரி ரா போப்பாண்டவரோ ய்திருக்கிறார் என்று ராய்ட் செய்தி ஸ்தாபனத்திலிருந்து பத்திரிகை வெளி வந்தாலும் நீங்கள் புவதில்லை. ஆனால் பழங் ப் புராணங்கள் கூறும் ய்யுரைகளைக் கனபாடிகள் ட்சேபம் செய்யும்போது ஆம் என்று கூறி தலையசைக் கவோ நீங்கள் தவறுவதில்லை.

பழமை உங்களைப் பார்த்துச் சிரிக்கிறது. எவ்வளவு படித் திருந்தால் என்ன! எத்தனை பட்டம் பெற்றுந்தான் என்ன! கல்லூரியிலும் பிற இடங்களி லும் கவின் கலைகள் கற்றுத் தேர்ந்தாலும் என்ன! ஜினிவா போய்வந்தால் என்ன! ஆட் டாவா நிதி மாநாட்டில் கலந்து கொண்டால் என்ன! ஆளவந் தார்கள் கூட்டத்தில் இருப்பவ ராயினும் என்ன! என் ஆணையை மீறுவார் எவர் உண்டு இத்தமிழ் நாட்டில் அப் டொல்லாத சூறு மானுக்களைத் தவிர என்று சொல்லி பழமைத் தேவதை கைகொட்டி நகைக்கிறது. உங் களைப் பார்த்து நகைக்கிறது! உங்கள் ஆங்கிலப் பட்டங்களைப் பார்த்து நகைக்கிறது! உங்கள் விஞ்ஞானப் புலமையைப் பார்த்து நகைக்கிறது! உங்கள் மந்திரிப் பீடங்களைப் பார்த்து நகைக்கிறது! உங்கள் சட்ட மன்றங்களையும் பல்கலைக் கழ கங்களையும் தமிழ்க் கலை நிலையங் களையும் கல்லூரி மண்டபங்களை யும் பார்த்து நகைக்கிறது! உங் கள் நாடகக் கலையை சினிமாவை இசைத் துறையைப் பார்த்து நகைக்கிறது! இவர்கள் நம் பிடியை விட்டு என்றும் அகல மாட்டார்கள் என்று நகைக் கிறது! நீங்கள் என்ன சொல் லப்போகிறீர்கள் பழமைத் தேவ தையின் இறுமாந்த சொல் லுக்கு ஈடாக? என்ன சொல்ல முடியும் உங்களால்?

---

## சிதம்பரனார் ஆணை

இந்து சமயம் என்பதன் பொய்களையும், புரட்டுகளை , ஆபாசங்களையும், அச் சமயப் பெயரால் செய்யப் ம் சடங்குகளின் வாயிலாகப் பிராமணரல்லாதாரின் ாருள்கள் கொள்ளையிடப்படுவதையும், பிராமணரல்லா ் தாழ்த்தப் படுவதையும், அக் கொள்ளைகளினின் ் தாழ்வினின்றும் பிராமணரல்லாதார் தப்புவதற் ய அவசியத்தையும் வழிகளையும் எல்லோருக்கும் ாங்கவைக்க வேண்டியது நமது முக்கிய கடமை.

—வ. உ. சிதம்பரனார்.

---


### போர்வாள்

திராவிடர் வார வெளியீடு

| | உள் நாடு | வெளிநாடு |
|---|---|---|
| தனி இதழ் ரூ. | 0 1 6 | 0 2 0 |
| ஆண்டு 1-க்கு | 5 0 0 | 6 8 0 |
| 6 மாதங்கட்கு | 2 8 0 | 3 4 0 |

விவரங்களுக்கு:

போர் வாள்,
பவழக்காரத் தெரு, சென்னை.





போர்வாள்

15—11—47 சனிக்கிழமை

## நிலை பெற்ற சிலை

செப்டம்பர் 17 அண்மையில் வந்து சென்றது. நவம்பர் 18 அடுத்து வர இருக்கிறது. முன்னது இன்று வாழும் தலைவர் பிரானின் பிறந்த நாள் பின்னது மறைந்த மாவீரர் இயற்கையுடன் கலந்த நாள். செப்டம்பர் 17ல் தலைவர் பெரியார் பிறந்தார். நவம்பர் 18ல் வீரர் சிதம்பரம் மறைந்தார். இரண்டு நாட்களும் தமிழ்க் குலத்தின் திருநாட்கள்; அஞ்சாத நெஞ்சுடைய சிங்க ஏறுகள் இருவர்தம் நினைவு நாட்கள்; தமிழர் வாழ்வு தழைப்பதற்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்த பெருமக்கள் இருவர்க்கும் தம் வணக்கம் செலுத்தி, அவர்தம் ஆணைவழி நிற்போம் என்று தமிழகம் சூளுரைக்கும் பொன்னாட்கள். வாழ்க அந்நாட்கள்!

கப்பலோட்டிய தமிழன் என்று பெருமிதம் ததும்பத் ததும்பத் தமிழர்களால் அழைக்கப்படும் தமிழ்மறவர் சிதம்பரனார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தை வலம் வந்தார்; ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி அமைத்தார்; பாட்டாளிகளின் பட்டாளம் திரட்டினார்; பரங்கியர் ஆட்சியை ஒழித்துக் கட்டுவேன் என்று வீர முழக்கம் செய்தார்; அஞ்சுவது யாதொன்றுமில்லை என்று பரணி பாடினார்; ஆங்கிலேயர் மிரட்டலுக்கும் துரைமாரின் உறுமலுக்கும் துளியும் அஞ்சாது அறப்போர் தொடுத்தார். **"நாட்டில் எங்கும் சுதந்தர வாஞ்சையை நாட்டினாய்—கனல் மூட்டினாய்—ஓட்டம் நாங்கள் எடுக்க என்றே கப்பல் ஓட்டினாய், பொருள் ஈட்டினாய்'** என்று வெள்ளையர் கூட்டம் இறுமாந்து கூறிய ஞான்று, **"பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளைகொண்டு போகவோ, நாங்கள் சாகவோ? அழுதுகொண்டிருப்பமோ ஆண் பிள்ளைகள் நாங்கள் அல்லமோ, உயிர் வெல்லமோ?'** என்று நெஞ்சு நிமிர்ந்து கூறினார். வெஞ்சினம் கொண்ட வெள்ளை ஏகாதிபத்தியம் அவரைக் கொடுஞ் சிறைக்குள் தள்ளிற்று; செக்கு இழுத்தும், சணல் இயந்திரம் ஓட்டியும், அச்சுப்பொறுக்கியும் அடங்கிக் கிடவென ஆணையிட்டது, நெஞ்சில் ஈரம் என்பது சிறிதுமின்றி. "எம்மை ஓட்டுவேன் என்று முழங்கினாயே, பரங்கியர் ஆள்வதோ நாம் மாள்வதோ என்று பண்பாடினாயே, ஏழைத் தொழிலாளர்களைக் கூட்டிவைத்து எம் வாழ்வில் நஞ்சு ஏற்றினாயே, கிட, கிட சிறையில்; காலில் இருப்பு விலங்குடன் கிட, உண்ண உணவின்றி ஒடுங்கிக் கிட; காதல் வாழ்வைத் துறந்து கண் கலங்கிக் கிட! துன்ப வாழ்வில் மிதந்து மிதந்து, உள்ளம் சிதைந்து, உடல் சிதைந்து, உன் உறுதியும் திறமும் பண்பும் சிதைந்துகிட.' என்று உள்ளம் குமுறிக் குமுறிக் கூறிற்று வெள்ளை ஆட்சி. "உங்கள் கொடுங்கோலுக்கே அஞ்சாத என் உள்ளம் இந்த வெஞ் சிறைக்கோ அஞ்சி நடுங்கும்" என்று விடை கூறிவிட்டு சிதம்பரனார் ஆறு ஆண்டுகள் சிறையில் கிடந்து சிதைந்தாரேயன்றி கொண்ட கொள்கையினின்றும் பிறழ்ந்தாரில்லை. அந்த அஞ்சாத நெஞ்சத்தை, அரிய தியாகத்தை, எத்தகைய எதி
கண்டும் மனம் சலைக்
போராடிய பெருவீரத்தைத்
ழகம் என்றும் மறவாது, மற
முடியாது. சிதம்பரனாரின் அ
வீரத் தியாகம் தமிழர்தம்
ளத்தில் என்றும் அழியாத
இடம் பெற்றுவிட்டது.

பல நூற்றாண்டுகளுக்
முன்னால், கடாரம் வெ
இராசராசனும், கங்
கொண்ட இராசேந்திரனு
ஈழத்தில் புலி பொறித்த பா
களும் பிறரும் கடலிற் க
செலுத்தினர். பிற நா
வேந்தர்கள் கண்டு கலங்
அளவுக்குக் கடற்படை இ
தது சோழ வேந்தரிடம். சே
அரசு மகத்தானதோர் கடல்
என்று வரலாற்று ஏடுகளு
தக்க ஆதாரங்களுடன் க
கின்றன. தமிழ்நாட்டுக் கப்ப
கள் ரோமுக்கும், கிரீசுக்கு
பர்மாவுக்கும், இலங்கைக்கு
ஜாவாவுக்கும் சுமத்ராவுக்கு
லாக்கடைவ் மால்டைவ் தீ
களுக்கும் சுழன்று சுழன்
சென்றன." தமிழ்நாட
அங்கு அகிலும் தேக்கும் அ
யாக் குன்றமென உண்டு! அ
காய் முத்துக் குவியும் கடல்
உண்டு! முகிலும் செந்நெலு
முழங்கும் நன்செய்களும் மு
லைக் காடு மணக்கும் பகுதிகளு
ஏராளமாயிற்றே" என்று ய
னரும் கிரேக்கரும் வியந்து க
தம் பொருள் கொடுத்து, அதற்
ஈடாகத் தமிழர் தம் பொரு
கொண்டு சென்றனர். தமிழ்
துறைமுகங்களாகிய மு
**தொண்டி புகார்** முதலிய இட
கள் பல நாட்டுக் கப்பல்களு
செறிந்து மிடைந்து துதைந்
நிற்கும் பெருங் காட்சி தந்த
என்று எண்ணும்போது ந
நெஞ்சு களிப்புக் கடலாடுகிறத
தமிழர்தம் ஆட்சியின் மாட்
கண்டு பெருமித முறுகிறத
ஆனால் இந்த மகிழ்ச்சியும் பெ

...ம் ஒரு கணம்தான். மறு
...ம் தமிழனின் இன்றைய
...நம் கண் முன்னால் நிழலாடு
... அவ்வளவுதான்! நிமிர்
...நெஞ்சு சாய்கிறது. எழுந்த
...மிதம் வீழ்கிறது.

...லை அடக்கி அதன் மீது
... பல செலுத்திச் சென்ற
...பழந் தமிழன்தானே நாம்
...லவே என்னும் சோகம் நம்
...சில் உறுகிறது. சோகம்,
...ருமூச்சைத்தான் தருகிறது.

... ஏன் சோகம்? பெருமூச்
...ான் எதற்கு? நாம் கலம்
...த்துதல் ஆகாதோ?''
...று கேட்டது ஓர் குரல்
...ல். கேட்ட தமட்டுமா,
...துக்குடியிலிருந்து ஈழ நாட்
...த் தமிழ்க் கப்பல் ஓட்டியும்
...டிற்று. அந்தக் குரலே
...பரனார் குரல். ஆங்கிலேய
...ய கப்பல் கம்பெனி அடுக்
...காக இன்னல் பல விளைத்
...; வீர சிதம்பரத்தை ஒடுக்கப்
...த்தது; அவரோ அடங்க
...த்தார்; அடக்க அடக்க
...ம் பந்துபோல் மேலும்
...ம் பணியாற்றினார். இறுதி
...தமிழ்க்கலம் ஓட்டவே செய்
... அவர் பெயர் வெல்க!

...தம்பரனார் கப்பல் ஓட்டியது
...மல்ல; தூத்துக்குடியில்
...ழிலாளர் போராட்டத்தை
...னின்று நடத்தி இருக்கி
... அவர் தூத்துக்குடி கோ
...ல் வேலை நிறுத்த காலத்தில்
...ழிலாளர் உள்ளங்களைத்
... எழுப்பி, அவர்களுடைய
...ாட்டச் சக்திகளை யெல்
... ஒன்று திரட்டி, வெற்றி
...கு அவர்களை அழைத்துச்
...றதும், போராட்ட காலத்
...உழைப்பவர் உள்ளம் சோர்
...திருக்க அவர்கட்கு வேறு
...கள் தேடிக்கொடுத்து உண்டியும் உடையும் உறையுளும் பிறவும் இலவசமாக அவர்களைத் தேடி வரும்படியான ஏற்பாடுகளை அமைத்ததும், வெள்ளை முதலாளிகளின் கொடுமையை எதிர்த்து நிற்பதற்கான நெஞ்சு உரமும் நேர்மைத் திறமும் தொழிலாளர்பால் பொங்கித் ததும்புதற்கேற்ற சூழ்நிலையை உண்டுபண்ணியதும் தொழிலாளர் போராட்ட வரலாற்றில் சிறந்த இருப்பிடம் பெறும் பெற்றி உடையன அல்லவோ?

சிதம்பரனார் பரந்த உள்ளமும் சீர்திருத்த நோக்கமும் உடையவர். ஆரியர் நுழைவால் தமிழகம் வளம் குன்றியதையும், புராணப் புல்லறிவு தமிழ்நாட்டின் சிறப்பைச் சிதைத்ததையும் அவர் தெள்ளத் தெளிய உணர்ந்திருந்தார். வள்ளுவர் குறளில் சிதம்பரனார்க்கிருந்த பற்று வேறு எந்த நூலிலும் இருந்ததில்லை. திரு. வி. கலியாணசுந்தரனார் ஒரு முறை கூறியது போல், அவர் திருக்குறள் என்னும் போர்வாளைக் கையில் ஏந்தியிருந்தார். அதன் உண்மைச் சிறப்பை உணராத காரணத்தாலேயே அருமைத் தமிழ்நாடு உரிமை இழந்தது என்பது அவருடைய கருத்து.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது சிதம்பரனார் கொள்கை. பாழும் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வர்ணாஸ்ரம மனப் போக்கு அவர்க்கு வேம்பெனக் கைத்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கண்ணிலான் ஒருவனை அவர், தம் இல்லத்தில் வைத்துப் போற்றி வளர்த்தார். சைவ உலகம் அவரைத் தூற்றிற்று; ஊரார் ஏசினர்; உற்றார் பழித்தனர், நண்பர்கள் நகைத்தனர். வீரர் வ. உ. சி. பழிச் சொல் கண்டு அஞ்சினாரில்லை. வசைமொழி கண்டு உள்ளம் உடைந்தாரில்லை. "உருவம் முதலிய ஒன்றிலும் பேதம் மருவுதல் இலாமை மலைபோல் கண்டும், கற்பனையாகக் காணும் குலத்தின் பழமை பாராட்டிப் பகுத்துப் பிரித்தல் நன்றோ?" என்று கவி பாடினார். "நகைப்பார் நகைக்க; எனக்கில்லை சாதி" என்று முழங்கினார்.

காந்தீயம் அவர்க்கு இனிக்கவில்லை. கதர் அவரை அண்டவில்லை. சாத்வீக சட்டமறுப்பு அந்த வீரர் உள்ளத்தில் தென்றல் வீசவில்லை. காந்தியாரின் திட்டமும் போக்கும் அவரால் ஒப்பப்படவில்லை. காந்தீயம் நாட்டிற்கு ஏற்றதன்று என்று 1920ல் வெளிப்படையாக அறிக்கை விடுத்தார் சிதம்பரனார். காந்தியாருக்குச் செல்வாக்கு அதுபோது ஓங்கி இருக்கக் கண்டும், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் அவர் ஆட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடிடக் கண்டும், மக்கட் கடல் அவர் பின்னே உருண்டு திரண்டு ஓடிடக் கண்டும், கப்பல் ஓட்டிய வீரர் மனம் மாறினாரில்லை. காந்தீயம் வேண்டும் என்று கும்பலிற் கூடி நின்று மனச்சாட்சிக்கு மாறுபடப் பேசினாரில்லை. இந்திய அரசியற் சுழல் காந்தியாரைச் சுற்றியே ஓடக் கண்டும் அவர் தன் கருத்தை உலகறியக் கூறிடத் தயங்கினாரில்லை. அது காரணமாக மக்கள் அவர்தம் தியாகத்தை—தீரத்தை — அஞ்சாமையை — மறந்தனர் எனினும், அவர் தன் கருத்தைச் சொல்ல மறந்தனரில்லை. நெஞ்சில் பட்டதைப் பட்டாங்கு சொல்லியே தீருவேன் என்று சொல்லி, காந்தீயத்திற்கே பெருத்த ஆதரவு திரண்டெழக்

கண்டும், தன் உள்ளக் கருத்தை உரைத்திட்ட மாட்சி பெரிது! பெரிது!

சுயமரியாதை இயக்கமே மற்ற எல்லா இயக்கங்களைக் காட்டிலும் நல்ல இயக்கம் என்று உள்ளம் திறந்து பேசினார் சிதம்பரனார் 1929ல். ஆம்! திரு. வி. கலியாணசுந்தரனார் வடநாட்டுப் பாசிசத்தை வீழ்த்துவதே இனி வேலை என்று முழங்கினார் கடலூரில் அது போல. பெரியாரின் பெருந் தொண்டு தமிழ் வயலைப் பண்படுத்துவது போல வேறு எவர் தொண்டும் செய்யாது என்னும் உறுதி படைத்த உள்ளத்தினர் வ.உ.சி. "நாயககரவர்கள் மிகச் சிறந்த யோகி" என்று மட்டுமல்ல, "அவர்தம் திருஉருவப் படத்தைத் தமிழர்கள் நாள்தோறும் காலை, மாலை பகல் மும்முறை வணங்க வேண்டும்" என்று கூடக் கூறியிருக்கிறார் அவர். வணங்க வேண்டும் என்று சொன்னதை மறந்துவிடுவோம் —அது அவர்தம் சமயப்பற்றின் காரணமாக எழுந்த வாசகம்— ஆனால் பெரியார் ஆற்றும் பணியின் சிறப்பைச் சிதம்பரனார் எடுத்துக் சொல்லியிருக்கிறாரே திட்டமாக, திட்பமாக, தெளிவாக—அதனைத் தான் பெரியாரைக் காயும் பழம் போக்கினர் உணரவேண்டும்.

"சிதம்பரம் பிள்ளை பெரிய ராஜத்துரோகி; அவரது எலும்புக்கூடுகூட ராஜ விசுவாசத்திற்கு மாறுபட்டது. பிள்ளையின் சொற்பொழிவைக் கேட்டால், செத்தபிணம் உயிர்த்தெழும்; அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடத்தில் விடுதலை பெறும்; புரட்சி ஓங்கி எழும்." என்று கூறினார் நீதிபதி பின்கே, இரண்டு ஜன்ம தண்டனைகளை அவருக்குப் பரிசளித்துவிட்டு! அந்தமான் சென்று இருபது ஆண்டுகள் வதையவேண்டும் என்பது தீர்ப்பின் கொடுமை. அத்தகைய மாவீரரைத்தான் ஆரியம் திரை போட்டு மறைத்துவிட்டது.... 1920 முதல் இன்றுவரை. ஆனால் மறையவில்லை மாணிக்கம். எப்படி மறையும்? காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ? கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ? பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மை ஆமோ? பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிப்ப துண்டோ? இல்லை முடியாது எனில், சிதம்பரனாரை அழிப்பதுவும் முடியாது. தமிழகத்தில் ஓர் நிலை பெற்ற சிலை வ. உ. சி. அது மறையாது; மங்காது. அதன் ஒளியும் என்றும் குறையாது; குன்றாது. அது தமிழர் வாழ்விற்கோர் கலங்கரை விளக்கம்.

ஆரியம் இட்ட திரை கிழிந்தது இன்று. தமிழர் குலம், "சிதம்பரமே நீ வாழ்க" என ஒலி எழுப்பிற்று இன்று. "சீரழகே! தீந்தமிழே! எம் தலைவா! உன்னைச் சிறையிட்டு மறைத்து விட்டால், நீ மறைந்தா போவாய்" என்று தமிழகம் பண் இசைத்தது இன்று. தமிழர் உணர்ச்சிப் பெருக்கின் இத்திறம் கண்டு நெஞ்சு கலங்கி நிலை தடுமாறிற்று ஆரியம் இன்று. தமிழ் இனம் களிக்க, பகை இனம் பதைக்க, உண்மை ஒளி வீசுகிறது; சிதம்பரத்தின் புகழ் பரவுகிறது; தமிழ் மறவனின் திண்தோள் வன்மையை நாடறிகிறது. கப்பலோட்டிய குரல் நாடெங்கும் கேட்கிறது. வ.உ.சி; வாழ்க வாழ்க வாழ்க எனும் ஒலி எங்கெங்கும் எழுந்துவிட்டது; எழத்தானே வேண்டும். எழுவதுதானே முறை: ஆரியம் விரும்பாது இதனை—நமக்கென்ன அதுபற்றி?

பளிங்கு மண்டபம் சிதம்ப... திற்கு எழவில்லை; ஒரு கவ... அதை வந்து திறக்கவில்... ஊரார் கூடிவந்து அதைக்கண்... களிக்கவில்லை. மெய்தான் இ... ஆனால் தமிழர் உள்ளந்தோ... வ. உ. சி. நினைவு மண்டப... எழுந்துவிட்டது. ஆம், எழு... விட்டது.

வாழ்க அம் மண்டப... வாழ்க வ. உ. சி! வாழிய செ... தமிழ்! வாழ்க நற்றமிழர்!

—

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியின் ஆதிக்கம் தமிழ... அழிக்கும் என்று, நாம், சிறை... கும், அதிகார தேவதைகளின் ஆ... பாட்டத்திற்கும், அஞ்சாது மு... கியகாலத்தில் நம்மைத்தாக்கின... சிவஞானம்—இந்தியை மறு... காரணத்திற்காக நம் குழுவி... இளங்காளைகள் இருவரை இடு... கூவி அழைத்த காலத்திலும் ந... முடன் சேர்ந்து தமிழை வளர்... மறுத்த சிவஞானம் இன்று இ... தியை எதிர்க்கிறார். எவ்வள... மகிழ்ச்சி இருக்கும் நமக்கு!

இன்று வடநாட்டு இந்தியின் நுழைவை எதிர்க்கும் சிவஞான... நாளை அல்லது மறுநாள் அல்ல... பிறிதோர் நாள் வடவர் தொட... பற்ற, இந்திய சமஷ்டியில் சேரா... டில்லி தர்பாருக்கு அடங்கி அழி... வேண்டிய நிலையில் இல்லாத தனி... தமிழகம் அல்லது திராவிட... காணும் நம் முயற்சியில் பங்... பெறுவார்—நிச்சயம் பங்கு பெ... வார் என்ற எண்ணத்தை நமக்கு... தருகிறது. மாநாட்டில் நிறைவே... றிய இந்தி மறுப்புத் தீர்மானம்.

இந்திய சமஷ்டியைப்பற்றி பேசிக்கொண்டே, நண்பர் சிவஞா... னம் அவரையும் அறியாம... கொஞ்சம் கொஞ்சமாக, ... இருக்கும் திசை நோக்கி வ... கொண்டிருக்கிறார். இந்த எ... ணத்தைத்தான் உறுதிப் படுத்... கிறது மேற்படி தீர்மானம்.

—

# தமிழரசு மாநாட்டில் திராவிடப் புயல்!

"தமிழ் நாடு தமிழருக்கே ன்னும் முழக்கம் இன்று ழுந்துள்ளது. இதனை யான் வரவேற்கின்றேன். இதுவே போன்று, ஆந்திரம் ஆந்திர ருக்கே என்றும், மலையாளம் லையாளிகட்கே என்றும், ன்னடம் கன்னடருக்கே ன்றும் முழக்கங்கள் முறை முறையே கிளர்ந்தெழுந்துள் ன. இந்த முழக்கங்களின் ருத்துக்கேற்ப அண்மையில் மிழ் தெலுங்கு முதலிய ாகாணங்கள் தனித்தனியே ரிந்துவிடும். பிரிந்த நான் கைந்து ஆண்டுகளுக்குள்ளா த் தெலுங்கர்கள் **அச்ச தெலுங்கு** வேண்டும் என்பர். லையாளிகள் **அச்ச மலையாளம்** வண்டும் என்பர். கன்னடர் ள் **அச்ச கன்னடம்** வேண்டும் ன்பர். அவர்கள் அனைவ ம் அப்போது விழித்துவிடு ர். தாம் தமிழரே என் தை உணர்ந்து விடுவர். து போழ்து என்ன முழக் ம் நாட்டில் வீறி எழும்? மிழ்நாடு தமிழருக்கே என் தா? அன்று! அன்று! வறு என்ன முழக்கம் ழும்?"

கட்டார் கலியாண சுந்தரனார் ாட்டாரை. மண்டபம் அதிர ந்தது முழக்கம் **திராவிட நாடு விடருக்கே** என்று! மண்டபம் மா அதிர்ந்தது தமிழர்தம் இதய ஒலி கேட்டு? இல்லை, ல. மேடையில் இருந்த நம் பர் ம. பொ. சிவஞானத்தின் ளம் அதிர்ந்தது; ஆரிய சேவை தமிழ்ப்பணிக்கும் இடையே லாடும் தெ. பொ. மீனாட்சி ரனாரின் எண்ணம் அதிர்ந்தது.

திராவிட இன உணர்ச்சியை இது வரை நேரில் காணும் வாய்ப்புப் பெறாத காமராஜரின் கருத்து அதிர்ந்தது. டாக்டர் நடேசனின் இளவலாய்ப் பிறந்து அவரேபோல் அழகு மீசையும் பெற்றிருக்கும் ஒரு பாவம் தவிர்த்துத் தமிழ் மறவர் கூட்டத்திற்கு வேறு நலன் ஏதும் செய்தறியாத முன்னாள் மேயர் தாதுலிங்கனாரின் உடல் அதிர்ந்தது. மாநாட்டின் இடை இடையே சிதறிக் கிடந்த பொதுவுடைமைத் தோழர்களின் அதிராத உள்ளமும் அதிர்ந்தது.

மறுபடியும் மறுபடியும் மாநாடு முழங்கிற்று திராவிட நாடு திராவிடருக்கே என்று. ஐந்து நிமிஷ நேரம். ஓயவில்லை அந்த இருதய கீதம். மாநாட்டைக் கூட்டியவர்கள் திகைத்தே போய்விட்டனர், இது என்ன தமிழரசுக் கட்சி மாநாடா அல்லது திராவிடர் கழக மாநாடா என்பது அறிய முடியாமல்! கலியாண சுந்தரனாரை அவர்கள் அழைத்தது வீரர் சிதம்பரனார் படத்தை மூடியிருக்கும் திரையை விலக்கிவிட.. ஆனால் அவரோ சிதம்பரனாரைமூடியிருந்ததிரையை விலக்கியதோடு நிற்கவில்லை. தமிழரசுக் கட்சியினர் பலர் உள்ளத்தில் ஊசலாடிய மூடு பனியையே விலக்கத் தொடங்கிவிட்டார். கவின் கலைகள் பல பயின்ற **தமிழ்த் தென்றல்**, சிதம்பரனார் மீது மென் காற்று வீசிவிட்டுப் போய் விடும் என்றுதான் அவர்கள் எதிர் பார்த்தனர். ஆனால் வந்த தென்றலோ வெடி குண்டை உடன்கொண்டு வந்தது. அது மாநாட்டைக் கூட்டியவர்க்கு அச்சத்தைக் கொண்டு வந்தது. தென்றல் வெடிகுண்டைக் கொண்டு வரும் என்று அவர்கள் எதிர் பார்க்கவில்லை, அவர்களென்ன? யாரும்தான் எதிர்பார்க்க முடியாது.

வீசிய வெடிகுண்டு வீழ்ந்ததும் மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் சடசடவெனச் சரிவது போல், கைதட்டும் பேரொலி எழுந்தது மாநாட்டில் திரு. வி. க. வின் சொற்கள் எழுந்ததும்.

எழுந்த ஒலிகளைக் கையமர்த்தி விட்டு, திரு. வி. க. மேலும் பேசுகையில், **அந் நாள், ஆந்திரர்களும் மலையாளிகளும் கன்னடர்களும் எங்கள் குலம் தமிழர் குலம், எங்கள் குலம் திராவிடர் குலம், எங்கள் குலம் தென்னாட்டுக் குலம் என்றுசொல்லவே போகிறார்கள்** என்று குறிப்பிட்டார்.

7-11-47 ஞாயிறன்று, சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் தமிழரசுக் கட்சி மாநாடு நடைபெற்றது. ம. பொ. சிவஞானம் மாநாட்டுத் தலைவர். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் வரவேற்புத் தலைவர். அந்த மாநாட்டில்தான் மேலே சொன்ன வண்ணம் திராவிடப் புயல் வீசிற்று! சற்றும் எதிர்பாரா நேரத்தில்! மாநாட்டில், வ. உ. சிதம்பரனார் படத்தைத் திரு. வி. க திறந்து வைத்தார். சிதம்பரனாரின் தியாகம், வீரம், அஞ்சாத நெஞ்சம், அரிய தொண்டு இவற்றை யெல்லாம் அவருடைய இனிய த்மிழ் நடையில் நிரல் நிரலே எடுத்துரைத்தார். சிதம்பரனார் காந்தீயத்துக்குத் தலைவணங்க மறுத்ததையும், கதர் கட்ட ஒப்பாததையும், காந்தியாரின் தலைமையை மறுத்ததையும் தெளிவாக எடுத்துரைத்தார். **நாம் அடிமைப் பட்டிருந்தோமே அதற்கு என்ன காரணம்? இந்த உலகம் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லி எழுந்ததே போலித் துறவு—அதுதான் காரணம்** என்று அவர் பேசியபோதும், **ஒரு காலத்தில் நான் காங்கிரஸ் தொண்டில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தேன். பின்னே நான் பிரிந்தேன். பெரியார் பிரிந்தார். சிதம்பரனாரும் பிரிந்தார். காரணம் என்ன? உரிமை உரிமை உரிமை. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்து நாங்கள் பிரிந்த காரணம் அடிமையாயிருந்து வாழ எம் உள்ளம் ஒவ்வாமையே** என்று அவர் கூறிய போதும், **சைவம் இன்று திருவாவடுதுறையில் இருக்கிறதா? தருமபுரத்தில் இருக்கிறதா? இரண்டு இடங்**

**தனிலும் இல்லை. சைவம் அங்கெல்லாம் செத்துப்போய்விட்டது** என்று அவர் நவின்ற போதும், **தமிழ் நாட்டில் உரிமை வாழ்வு அரும்பி மலர்ந்து காய்த்துக் கனிய தமிழர் உரிமை உணர்ச்சியே போதும்; திருவள்ளுவர் கனலே போதும்· பிறர் உதவி உங்களுக்கு வேண்டாம்; படேல் உதவி உங்களுக்கு வேண்டாம்** என்று அவர் தமிழரசுக் கட்சி மாநாட்டினரை இடித்துரைத்த போதும் அவருடைய உண்மை உள்ளத்தை அவரே படப் பிடிப்புச் செய்தல் போன்றிருந்தது·

"உங்கள் முன் இன்று நான் ஒரு முனிவனாய் நிற்கிறேன். பழங்கிழவனாய் நிற்கிறேன்· சிதம்பரனார் என்னும் சொல் சித்+அம்பரனார் என்று பிரிந்து வெறும் பாழ் என்று பொருள்படும்" என்று அவர் தன் பேச்சைத் துவக்கிய போது "ஏது! திரு· வி. க. வின் இன்றைய பேச்சு வெறும் வேதாந்தம்தான்போலும்" என்றே பலரும் எண்ணினர். கடலூரில் கண்ட கலியாணசுந்தரனாரை இன்று காணமுடியாது; வெறும் தத்துவம் பேசும் பழைய கலியாணசுந்தரனாரைத்தான் காணமுடியும் என்றே அனைவரும் முடிவு கட்டிவிட்டனர்· ஆனால் நேரம் செல்லச் செல்ல, பேச்சு வளர வளர, முன் சொன்னவாறு அவர்தம் பேச்சு வீரவுரையாக, கடலூர் உரையாகவே முடிந்தது.

மாநாட்டுத் தலைவர். ம. பொ. சிவஞானம் வழக்கம்போல் பேசினார். உரிமைக்குத் தமிழ்க்கொடி என்றும், உறவுக்கு மூவர்ணக் கொடி என்றும், நல்ல நாள் பார்த்து, மங்கல நாள் பார்த்து முரசு வெளிவந்திருக்கிறது என்றும் குறிப்பிட்டுவிட்டு, **பூகோள ஒற்றுமையை—இந்தியாவின் ஒருமையை யாரும் மறக்கமுடியாது· ஆகவே இந்திய சமஷ்டி அவசியம்** என்றார். ஆம், சொன்னார்! 1947-ல் இந்த நைந்துபோன பழைய வாதத்தை எடுத்து நிறுத்தி அதற்குச் செயற்கை மூச்சு ஊட்டிவிட்டுச் சொன்னார். வடநாடு தென்னாட்டைச் சுரண்டுகிறது என்பதை நன்றாக அறிந்திருந்தும், டாடா — பிர்லா டால்மியா கூட்டம் தென்னாட்டை வாழவிடாது என்பதை உணர்ந்திருந்தும், படேலிசம் ஆணையிடும் வழி செல்வது இந்திய சமஷ்டி— அதில் நமக்கு நீதி கிடைக்கவே கிடைக்காது என்பதைத் தெள்ளத் தெளியத் தெரிந்திருக்கும் நண்பர் சிவஞானம் கூறினார் இந்தியாவின் பூகோள ஒற்றுமையை யார் மறக்க முடியுமென்று! பாகிஸ்தான் கூடாது என்பதற்காக எழுப்பப் பட்ட இந்த வாதத்தை-எப்போதோ தவிடு பொடியாக்கப் பட்டுவிட்ட இந்த வாதத்தை இத்தனை காலம் பொறுத்துத் தோழர் சிவஞானம் அவசர அவசரமாக எடுத்து தமிழ் முரசின் விளிம்பில் சொருகசாகச் செருகுவதன் காரணம் என்ன? பூகோள ரீதியாக இந்தியா ஒரு மைப்பட்டிருக்கிறது என்கிறாரே சிவஞானம், அப்படியானால் இந்தியாவில் தனித்தனி அரசுகள் அமைவதை அவர் எதிர்க்கிறாரா? பாகிஸ்தான் ஏற்பட்டது தவறு என்று கருதுகிறாரா? திராவிடஸ்தானை அவர் எதிர்ப்பதும் இதே காரணத்தை முன்னிட்டுத்தானா? அப்படியானால் அந்த எதிர்ப்பு மிக மிகப் பலவீனமானது.

பூகோளப்படி இந்தியா ஒன்றாய்த்தான் இருக்கட்டுமே! அதனாலேயே இந்தியா ஒரு சமஷ்டியில் இருக்கவேண்டும் என்று ஏற்பட்டு விடுமா? அப்படியானால் ஐரோப்பா முழுவதும் ஒரே சமஷ்டியில் இருக்கவேண்டுமே! அப்படி இருக்கக் காணோமே! ஐரோப்பா என்னும் நிலப்பகுதி ஒரே இடத்தில் கூட்டு மொத்தமாக இருந்தாலும், ஆட்சி முறையில் ஹாலந்து, டென்மார்க்கு, பெல்ஜியம், நார்வே, ஸ்வீடன், ஜர்மனி, பிரான்சு, ஸ்பெயின், போர்ச்சுகல், ருமேனியா, பல்கேரியா, ரஷ்யா என்று எத்தனையோ நாடுகளாகத்தானே நம் கண்முன்னே அது விளங்குகிறது!

பூகோளத்தையேகூட மனிதனால் மாற்ற முடியுமே, தேவையானால்! மனிதன் வெட்டிய சூயஸ் கால்வாய் பூகோளத்தை மாற்றி இருக்கிறது· மனிதன் வெட்டிய பனமா கால்வாய் பூகோளத்தை மாற்றியிருக்கிறது· எனவே பூகோளப்படி இந்தியா ஒன்றாயிருக்கிறது என்றால் அதற்காக இந்தியா முழுவதும் ஒரே சமஷ்டியில் இருக்க வேண்டும் என்று அர்த்தமா? என்றாவது அப்படி இருந்ததுண்டா? இராமாயண ப... காலங்களில் 56 நாடுகளாக இ... ததுதானே இந்தியா என்னும் ... பகுதி? அசோகனுக்கும் ... னுக்கும் அவுரங்கசீப்புக்கும் ... எல்லா வடநாட்டு வேந்தர்கட்... தலை குனியாது நிமிர்ந்து நி... தனியாட்சி நடத்தவில்லையா ... விடம்· ஆங்கிலேயர் ஆளுகை... முன்னால் **என்றுமே** இந்தியா ... ஆட்சியின் கீழ் இருந்ததில்லை ... பது இந்திய வரலாற்றின் ... பாடம். இது தெரியாதா தோ... சிவஞானத்திற்கு? தெரிந்... இந்திய சமஷ்டி வேண்டும் என... கூறினார்? தமிழ் முரசு கொ... சிவஞானமா இப்படிக் கூறுவ...

சிவஞானத்தின் தலைமையு... யின் இந்தப் பகுதி தமிழர் உள்... ளத்தைப் புண்படுத்துந் தன்மை... என்று நாம் சொல்லாமல் இரு... முடியாது.

ஆனால், பிற்பகல், மாநாட்... நிறைவேறிய தீர்மானங்க... ஒன்று, தமிழருக்குச் சுயநிர்ண... —தம் தலைவிதியை தாமே உருவா... கும் உரிமை தேவை என்று க... கிறது. அப்படியானால் தமி... தமக்கு வடநாட்டுத் தொடர்பு ... வகையிலும் தேவை இல்லை என... மெஜாரிட்டி ஓட்டுகளின் மூ... கூறிவிடுவராயின், இந்திய சம... தேவை இல்லை என்று வரையறு... துச் சொல்லிவிடுவராயின், ம.பொ. சிவஞானம் அப்போதும் சம... வேண்டும் என்று வாதாடுவார... ஏனோ சிவஞானத்திற்கு வட... டம் இவ்வளவு ஆசை—பற்று... பரிவு பிறக்கிறது என்பது... நமக்குத் தெரியவில்லை. ஆந்... மீது காட்டும் அளவு ஆத்திர... மலையாளியரைப் போருக்... அழைக்கும் அறைகூவல் வடநா... ஆதிக்கவாதிகளிடம் செல்லா... ஏன்? விளக்கம் வேண்டும்.

மாநாட்டில் நிறைவேற்றப்ப... மற்றொரு தீர்மானம் அரசாங்... தமிழ்நாட்டுக் கல்வியில் இந்தி... லிய மொழிகளுக்கு இடம் ... கூடாது—செல்வாக்கு அளிக்... கூடாது என்பது· இதை ... முழு மனதுடன் வரவேற்கிறே... ஒரு காலத்தில் இந்தி மொழி... வாழ்த்துரை வழங்கிய சிவஞா...

(8-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

...ர்வீஸ்'. முதலியாருக்கு குப்பு ...மி பேரில் அளவு கடந்த ...றுதல். எந்நேரமும் 'குப்பா ...ப்பா' என்று அவர் கூப்பிடு ...ர். குப்புசுவாமியை ஊரார் ...ட்டியாரின் 'பிரைவேட் ...கரடரி' என்று பரிகாசம் ...சய்வர். அவ்வளவு ஆசை, ...தலியாருக்கு குப்புசாமியிடம்!

...முதலியாருக்குக் கலியாண ...தரம் முதல் மகன். ஆள் ...ழகாகவும் இருப்பான். அவன் ...ணமும் அப்படியே. அவனைத் ...க்கி வளர்த்ததெல்லாம் குப்பு ...ாமிதான். எனவே குப்புசாமி ...டம் அவன் அளவு கடந்த ...சை வைத்ததில் ஆச்சரியம் ...ன்ன? அவன் அடிக்கடி குப்பு ...மியின் வீட்டுக்குப் போவான். ...த நேரத்தில்தான் கலியா ...ம் பங்கஜத்தைப் பார்க்கவும், ...தலிக்கவும் நேர்ந்தது. உண் ...மையிலேயே கலியாணம் ...கஜத்தை அளவு கடந்து ...ம்பினான். ஆனால் பாவம் ...தையின் கண்டிப்பு குறுக்கே ...றது. அதைத் தாண்டும் ...தி அவனிடம் இல்லை. முதலி ... தம் 'குடும்ப கௌரவத் ...'க் காப்பாற்றிக்கொள்ள கலி ...ணத்திற்கு வத்ஸலாவை ...ம் முடித்தார். மண வைப ...தில் பழைய காதலியைக் ...யாணம் மறந்தான். வத்ஸலா ... வசீகரத்தின் வசமான ...வன் பங்கஜத்தைப் பற்றி ...க்கவில்லை. அது சகஜந் ...னை.

## 3

...ரவு மணி 9 இருக்கும். ...ாவிலே அமர்ந்து வெற் ...ப் பாக்கைப் போட்டுக் ...ண்டிருந்தான் கலியாணம். ...போது எங்கிருந்தோ ...ப்'பென்று அவன் காலடி ...ஓர் கடிதம் வந்துவிழுந்தது.

அவன் சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரும் அவன் கண்களுக்குப் புலப்படவில்லை. உடனே கீழே விழுந்த கடிதத்தை எடுத்துப் பிரித்தான். அவன் முகத்தில் வேதனையின் சாயல் படர்ந்தது. ஆனால் யாரோ வரும் காலடி ஓசை கேட்கவே 'சட்' டென்று கடிதத்தை மடித்துச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். அங்கு வந்தவள் வேறுயாருமில்லை, வத்ஸலாதான் (வத்ஸலா தமிழ்ப் பெண்தான். ஆனால் ஆரியப் பெயர் சூட்டி விட்டனர் பெற்றோர். வத்ஸலாவுக்கு மட்டுமா? நமக்கெல்லாம் கூட நம் தாய் தந்தையர் இப்படித்தானே ஆரிய முகமூடி அணிந்திருக்கின்றனர்!)

"கொஞ்சம், தண்ணி கொண்டுவா, வாய் கொப்பளிக்கணும்" என்றான் கலியாணம் வாயில் வெற்றிலைப் பாக்கைக் குதப்பியவாறு. உடனே அவளும் அறையைவிட்டு அகன்றாள். கலியாணம் கடிதத்தைப் பிரித்தான். அது இது:

"அன்பரே,

ஏழை எழுதுகின்றேன். ஆனால் பழையகாதலி. நினைவுக்குவரும் என்று நம்புகின்றேன் — எனது ஒரு வேண்டுகோள். ஓரே வீணை கனவான் வீட்டுக் காரிகையின் கையிலிருந்தால் அதற்கொரு மதிப்புதான். ஏழை வீட்டுப் பேழையிலிருந்தால் அதற்கொரு மதிப்புதான். என் அழகு ஏழைவீட்டு வீணை போன்றது. அதுவும்கூட அதன் தரம் அறிந்தாரிடம் இருந்தால் அதனின்றும் அற்புதமான இசை பிறக்கும். ஆனால் அதே வீணை ஒரு கசடனின் கையில் அகப்பட்டால்.......? தந்தி அறுந்துவிடும். ஆம் தந்தி அறுந்து பட்டால் நாதம் ஏது? இசைதான் ஏது? என் உயிரின் நாடியும் அறுந்துவிட்டது. எனவே இனி என் வாழ்விலே இன்பம் ஏது?

சிதைவிலே வதையும் நான் தங்களை இறுதியாக ஒன்றே ஒன்று மன்றாடிக் கேட்கிறேன். இன்றைக்கு இரவு பன்னிரண்டு மணிக்கு, முன்பு ஓர் இரவு சந்தித்தோமே அதே மரத்தின் கீழ் காணுங்கள். தவற வேண்டாம்.

இப்படிக்குத் தங்கள்,
பழைய காதலி பங்கஜம்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் அவன் மனவேதனை, அதிகமானது. பழைய 'காதல் நினைவுகள்' அவன் கண்முன்னே தோன்றித் தோன்றி வதைத்தன. "டக்டக்"கென்ற சப்தத்துடன் ஓடும் கடிகாரத்துடன் அவன் இருதயமும் பந்தயம் போட்டது. வத்சலாவும் 'செம்பு' நிறைய தண்ணீர் கொண்டு வந்தாள்.

## 4

எங்கும் இருள். கலியாணம் இருளில் தட்டுத் தடுமாறி நடந்தான். அவன் கையிலிருந்த 'டார்ச்' இருளைக் கிழித்துச் சென்றது. குறிப்பிட்ட மரத்தை அடைந்ததும் அவன் தன் 'டார்ச்சை' அணைத்தான். சுற்று முற்றும் மிகக் கூர்மையாகப் பார்த்தான். ஆனால் ஒருவரும் தென்படவில்லை. ஏதேனும் சந்தடி கேட்கிறதாவென்று உற்றுக் கேட்டான்; ஒன்றும் புலப்படவில்லை. அவன் இருதயம் வேகமாக அடிக்க ஆரம்பித்தது. கண்ணுக்கெட்டிய தொலைவில் பங்களாவில் ஒரு சந்தடியும்

காணோம். எங்கும் அமைதி. கலியாணம் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி பன்னிரண்டரை ஆவதை உணர்ந்தான். எனவே பயம் அதிகமானது. உடனே தன் டார்ச்சைப் போட்டு சுற்றிலும் பார்த்தான். ஆனால் தற்செயலாக விளக்கொளி, மரத்தின்மேற் பட்டது. விளக்குப் பட்ட உடனே "ஆ, இதென்ன என்று அவன் அலறினான். செயல் மறந்து கையிலிருந்த 'டார்ச்' கீழே தொப்பென்று விழுந்தது. கண்ணாடியும் உடைந்தது. "தற்கொலை.... பங்கஜம் தற்கொலை"—அவன் வாய் முணுமுணுத்தது. குப்பென்று அவன் உடலெல்லாம் வியர்த்தது. கால்கள் 'வெட வெட' வென்று நடுங்கின. அவன் இரண்டடி பின்னிட்டான். ஆனால் தன் நடுங்கிய கரத்தால் டார்ச்சை எடுத்து மறுபடியும் பிணத்தின்மேல் அடித்தான். பிதுங்கிய கண்கள்— பயங்கரக் காட்சி அளித்தன அந்த பயங்கர இரவிலே. ஆனால் மீண்டும் அவன் 'டார்ச்' கை நழுவிக் கீழே விழுந்தது.

"பங்கஜா" அவ்வளவுதான் அவனால் பேசமுடிந்தது. சற்றுப் பொறுத்து தைரியத்தை வரவழைத்துக்கொண்டு,

"பங்கஜா. இதுதானா உனக்கு முடிவு? உன்னை இந்தக் கோலத்திலா நான் காண, நீ விரும்பினாய். என்னுடைய இரக்கமற்ற செயல் உன் மனதை மரமாக ஆக்கி விட்டதா? ஆம். நீ பழிக்குப்பழி வாங்கிவிட்டாய். குடும்ப கௌரவத்திற்காக ஒரு ஏழைப் பெண்ணின் உயிர் குடித்த கொலைஞன் நான். நான் உன் உயிர்நாடியை அறுத்த கசடன் தான். என்னை என்றென்றைக்கும் வேதனையில் ஆழ்த்தி நீ அமைதி பெற்றுவிட்டாய். நீ பழிக்குப் பழி வாங்கிவிட்டாய், அதுவும் முன்பு எந்த இடத்திலே உன்னை நான் என் 'இருதய தேவி'யாகக் கண்டேனோ அதே இடத்தில் உன்னை இன்றைக்கு இருதயத்தை இரு கூறாகப் பிளக்கும் 'ஈட்டி முனை' யாகக் காண்கின்றேன். முன்பு உன்னை இன்ப வாழ்வாகக் கண்டேன். ஆனால் இப்போது உன்னைக் கொடுங் கூற்றமாகக் காண்கின்றேன். நீ என் வாழ்விலே 'எரிகுண்டு' வீசிவிட்டாய். இனி அதை அணைக்க இந்த வறண்ட பாலையிலே நீர் ஏது? அழகின் உருவம் நீ. உன்னை அலக்கழித்தேன். இன்று அவதிப்படுகின்றேன். ஒரு காலத்தில் ஆசை மொழி கூறினேன் இன்று மோசம் செய்தேன்; நம்பிக்கைத் துரோகம் செய்தேன்; உன்னைக் கைவிட்டேன். அங்கு நான் 'மணவாழ்வு' நடத்தினேன். நீ இங்குப் 'பிணவாழ்வு' நடத்தினாய். அங்கு நான் பணக்காரப் பெண்ணோடு 'இன்பபுரிப் பயணம்' துவக்கினேன். ஆனால் நீ எனக்கு இன்று 'துன்பபுரிச் சீட்டு' அளித்துவிட்டாய். பங்கஜா, என்னை என்றென்றைக்கும் துன்பத்தில் ஆழ்த்தி விட்டாய்.

ஆம், நான் குற்றவாளி, மனமார ஒப்புக் கொள்கிறேன்; என் பாதகச் செயலை உணர்ந்து, உணர்ந்ததால் ஏற்படும் சுத் துடிப்புடன் ஒப்புக் கிறேன், நான் குற்றவாளி.

ஆனால் ஒன்று கேட்கி பங்கஜம்! உன்னைத்தான் றேன்! உன்னைக் கொலை பாவி நான் கேட்கிறேன்! ந்தை உள்ளம் படைத்த மற்ற என் அருமைப் ப தைத்தான் கேட்கிறேன். எ நீ மன்னிப்பாயா, மன் பாயா" என்று கதறி தேம்பினான், தேம்பித் அழுதான். அழுது அ அரற்றினான். மன்னிப் மன்னிப்பாயா என்று மீ மீண்டும் கூவினான். காட் சுற்றிச் சுற்றிக் கூவினான். னிப்பாயா மன்னிப்பாயா அந்தக் காடும் எதிரொலி தது. ஆனால் விடை இல்லை. பங்கஜம் பேச அவளுடைய அதரம் அ வில்லை. அந்த இதழ்கள் களை உதிர்க்கவில்லை. கல்ய ஒரு சொல் வீசுவத அவள் ஆயிரம் கதைகளைப் இருக்கிறாள்—அது மு ஆனால் இப்போதுதான் அ "அந்த உலகத்" திருப் விட்டாளே! அதுவும் அவ அவள் எப்படிப் பேசுவாள்

———


வெளிவந்துவிட்டது! உயரிய நூல்!

**வாழ்க திராவிடர்!**

[க. அன்பழகன். எம். ஏ. எழுதியது.]

இனத்தின் பேரால் வரலாற்றுச் சான்றுகளுடன் திராவிட நாடு கேட்கப்படுகிறது. மொழியின் பேரால் தமிழ் நாடு கேட்கப்படுகிறது. இரண்டிற்குமுள்ள தாடர் தம்மியங்களை விளக்குவது இந் நூல்.

விற்பனையாளர்க்கு 25o/o கழிவுண்டு.

**திராவிடன் பதிப்பகம்**

P. B. 18, (வேலூர், வ. ஆ.)


Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar